# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 05.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 14438/SCIC/2023 & CP 2078/SCIC/2023**

திரு.A. ஜான் — மேல்முறையீட்டாளர்
எண்.4750,(Plot No.43) ராஜ் நகர்
மாதாக்கோட்டை, சரபோஜி கல்லூரி அஞ்சல்
தஞ்சாவூர் - 613 005.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆணை**

**SA 14438/SCIC/2023:**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 23.03.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.04.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 24.05.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 19.06.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 09.08.2023 |
| 6 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 13.11.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 04.04.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர் பதிவு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "Ref: Registered sale deed No.2390, dated 28/07/1943 including 3 Nos. - regarding - Was Mr.S.Chinnappan enjoying clear title of property in R.S.No.205/3 individually when he signed the sale deed document No.3571 dated 06/11/1995 ?" என்பன போன்று 15 (பதினைந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**CP 2078/SCIC/2023:**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 23.03.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.04.2023 |
| 5. | மனுதாரரின் புகார் மனு | 01.06.2023 |
| 6 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 13.11.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 28.12.2024 |

2. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர் பதிவு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "Ref: Registered sale deed No.2390, dated 28/07/1943 including 3 Nos. - regarding - Was Mr.S.Chinnappan enjoying clear title of property in R.S.No.205/3 individually when he signed the sale deed document No.3571 dated 06/11/1995 ?" என்பன போன்று 15 (பதினைந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**3. மேற்குறிப்பிட்ட SA 14438/SCIC/2023 & CP 2078/SCIC/2023 ஆகிய இரண்டிலும் மனுதாரர் கோரியுள்ள தகவல் ஒரே பொருண்மை கொண்டதாக அமைந்துள்ளதால், அவ்விரண்டையும் ஒருங்கியலாக விசாரணை செய்ய ஆணையம் முடிவு செய்தது. இன்றைய (05/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் திரு.வெ.சின்னராஜ், மாவட்டப் பதிவாளர், தஞ்சாவூர் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே, 21/04/2023, 19/06/2023 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக, முறையே பொதுத் தகவல் அலுவலரும், மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் அனுப்பியுள்ளதாக, மீண்டும் 13/11/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், தகவல்களை அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். மனுதாரர், 04/04/2025 தேதியிட்டு தனது ஆட்சேபணை மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.**

**4. இன்றைய விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர், சமீபத்திய இனவாரியான 04/06/2025 தேதியிட்ட தகவல்களைக் கொண்டு வந்திருந்தார். அதனை, மனுதாரருக்கு WhatsApp வாயிலாக அனுப்பப்பட்டது. அதன் பின்னர், மனுதாரர், அத்தகவல் ஏற்கனவே, தெளிவாக இல்லாததால், தன்னால் அதனைப் படிக்க இயலவில்லை என்றார்.**

5. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், தஞ்சாவூர் அவர்கள், மேற்குறிப்பிட்ட 04/06/2025 தேதியிட்ட தகவலை மனுதாரருக்கு மூன்று நாட்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் SCIC பிரிவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இத்துடன், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

6. மனுதாரரின் புகார் மனுவைப் பொறுத்த வரையில், மனுதாரர், தனது 23/03/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு, உரிய கால வரம்பான 30 நாட்களுக்குள் பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காமைக்கு, அவர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு, தனக்கும் உரிய இழப்பீடு வழங்க வேண்டுமென்று கோரினார். அதற்கு, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் 23/03/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனு தமது அலுவலகத்தில் 25/03/2023 தேதியிட்டு கிடைக்கப் பெற்றது, அதற்கு 21/04/2023 தேதியிட்ட தகவல் 25/04/2023 தேதியிட்டு அனுப்பப்பட்டது எனத் தெரிவித்ததோடு, அது தொடர்பான அனுப்புகை சான்றினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, மனுதாரரின் 23/03/2023 தேதியிட்ட மனுவிற்கு, பொதுத் தகவல் அலுவலர் 25/04/2023 தேதியிட்டு தகவல் அனுப்பியுள்ளது தெளிவாகிறது. மனுதாரரின் புகார் மனுவில், மனுதாரர், தனக்கு பொதுத் தகவல் அலுவலரின் தகவல் 27/04/2023 தேதியிட்டு, அதாவது 35 நாட்களைக் கடந்த பின்னர் கிடைக்கப் பெற்றது எனக் குறிப்பிட்டுள்ளார். அரசு அலுவலகத்தின் நடைமுறையில் 5 நாள் காலதாமதம் ஏற்படக்கூடும். எனவே, அந்தக் காலதாமதம் மன்னிக்கப்படக் கூடியதே என ஆணையம் கருதுகிறது. மனுதாரர் 01/06/2023 தேதியிட்டு அனுப்பிய புகார் மனுவில், மேற்குறிப்பிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனு SA 14438/SCIC/2023, நாள் 09/08/2023-வில் கோரியுள்ள தகவலையேக் கோரியுள்ளார். அவையிரண்டையும் ஒருங்கியலாக ஆணையம் இன்று விசாரணை மேற்கொண்டது. மனுதாரருக்கு, 2 நாட்கள் காலதாமதத்துடன் ஆவணங்களின்படியான உரிய தகவலை, பொதுத் தகவல் அலுவலர் அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. மேற்குறிப்பிட்ட காலதாமதம் மன்னிக்கப்படக் கூடியது என்பதால், பொதுத் தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கவோ, மனுதாரருக்கு இழப்பீடு வழங்குவதற்கான முகாந்திரமோ இல்லை என ஆணையம் கருதி, மனுதாரரின் புகார் மனு இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண்கள். SA 14438/SCIC/2023 & CP 2078/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
தஞ்சாவூர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.A. ஜான்
எண்.4750,(Plot No.43) ராஜ் நகர்
மாதாக்கோட்டை, சரபோஜி கல்லூரி அஞ்சல்
தஞ்சாவூர் - 613 005.

RG/PC